**Source:** *Tamil Murasu,* p3
**Date:** 29 November 2017

# தனியார், கூட்டுரிமை வீடுகளின் விலை அக்டோபரில் 0.6% கூடியது

சிங்கப்பூரில் கட்டி முடிக்கப்பட்ட தனியார் அடுக்குமாடி வீடுகள் மற்றும் கூட்டுரிமை வீடுகளின் விலை செப்டம்பர் மாதத்துடன் ஒப்பிடுகையில் அக்டோபரில் 0.6% கூடியது.

சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் ஆகப் புதிய சிங்கப்பூர் குடியிருப்பு இட விலை அட்டவணை இந்த விவரங்களைத் தெரிவிக்கிறது.

மாத அடிப்படையிலான இந்த உயர்வு, செப்டம்பர் மாதத்தில் இடம்பெற்ற 0.2% உயர்வைவிட கூடுதலானது. மத்திய வட்டாரத்தில் கட்டப்பட்ட சிறு வீடுகள் தவிர இதர வீடுகளின் விலை மாத அடிப்படையில் அக்டோபரில் 1.2% கூடியது. இந்த உயர்வு செப்டம்பரில் 0.4% ஆக இருந்தது.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.